# க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
## வணிகக் கல்வி I
நேரம் : 2 மணித்தியாலம்

01. வணிகமொன்றின் அடிப்படையாகக் கொள்ளப்படுவது
   1. விற்பனையை உச்சப்படுத்தல்
   2. சந்தையில் நிலைத்திருத்தல்
   3. போட்டியாளரை வெற்றிகொள்ளல்
   4. மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்
   5. மேற்கூறிய யாவும்

02. பின்வரும் அட்டவணையானது உற்பத்தியினை துறை ரீதியாகவும் அதற்குள் உள்ளடங்கும் விடயங்களும் தரப்பட்டுள்ளது.

| | உற்பத்தித் துறை | | உள்ளடக்கப்படும் விடயங்கள் |
|---|---|---|---|
| I | விவசாயத்துறை | A | ஏற்றுமதி வியாபாரம் |
| II | கைத்தொழில் துறை | B | மின்சாரம் |
| III | சேவைகள் துறை | C | வீட்டுரிமை |
| | | D | கால்நடை வளம் |
| | | E | மனைத்தொழில் |
| | | F | சிறு ஏற்றுமதி பொருட்கள் |
| | | G | புகையிலை |
| | | H | தொழிற்சாலை உற்பத்தி |
| | | I | அஞ்சல் தந்திப் போக்குவரத்து |

1. I – A, D, G    II – C,E,H    III – B, F, I
2. I – D, F, G    II – B, E, H    III – A, C, I
3. I – A, D, F    II – B, C, I    III – E, G, H
4. I – A, F, G    II – B, E, I    III – C, D, H
5. I – A, D, H    II – B, F, I    III – C, E, G

03. வணிகங்களில் அக்கறை செலுத்தும் பிரிவினர்களும், நிறைவேற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்புகள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

| | பிரிவினர் | | அக்கறை செலுத்துவதற்கான காரணி |
|---|---|---|---|
| A | ஊழியர் | F | பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும் |
| B | முகாமையாளர் | G | சந்தைப்பங்கு |
| C | வாடிக்கையாளர் | H | பதவி உயர்வு |
| D | உரிமையாளர் | I | விற்பனை உபாயங்களைத் தீர்மானித்தல் |
| E | போட்டியாளர்கள் | J | வெற்றிகரத் தன்மை |

1. F, H, J, G, I    2. H, G, F, I, J
3. H, J, F, G, I    4. F, H, J, I, G
5. F, B, J, G, H

04. கீழே பேரினச் சூழல் காரணிகள் நிரல் “அ” விலும் அவற்றுடன் தொடர்புடைய விசைகள் “ஆ” நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| அ | ஆ |
|---|---|
| A - அரசியல் சட்டச்சூழல் | 1. மூலப்பொருள் பற்றாக்குறை |
| B - பூகோளச் சூழல் | 2. சடங்குகளும் சம்பிரதாயங்களும் |
| C- பொருளாதாரச்சூழல் | 3. அரசை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்கள் |
| E - சமூக கலாசாரச்சூழல் | 4. நாடுகளுக்கிடையில் பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பம் அதிகரித்துள்ளமை |
| E - இயற்கைச் சூழல் | 5. தனியார் வருமான உயர்வு |

அ, ஆ ற்கிடையிலான பொருத்தமான இணைப்பினைத் தெரிவுசெய்க.

1. A – 3, B - 2, C - 4, D – 5, E - 1
2. A – 3, B - 4, C - 5, D – 2, E - 1
3. A – 4, B - 1, C - 2, D – 5, E - 3
4. A – 1, B - 2, C - 4, D – 3, E - 5
5. A – 2, B - 1, C - 4, D – 5, E - 3

05. பின்வருவனவற்றுள் எது ஒரு வணிகத்தின் நுகர்வோர் சார் பொறுப்பு அன்று
1. தரமான பண்டங்களை வழங்குதல்.
2. சூழலுக்கு ஊறு விளைவிக்காது தொழிற்படுதல்.
3. நியாயமான விலையில் பண்டங்களை வழங்குதல்.
4. நுகர்வோருடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அமைவாகத் தொழிற்படுதல்.
5. நுகர்வோருக்குப் பொருத்தமான தகவல்களை வழங்குதல்

06. பின்வருவன நுகர்வோர் உரிமைகள், நுகர்வோர் பொறுப்புக்கள் என்பவற்றுட் சிலவாகும்.
A – சமூக கரிசனை B – நுகர்வோர் கல்வி C - சூழல்சார் அறிவுடமை
D – பகுத்து ஆராயும் இயல்பு E – பாதுகாப்பிற்கான உரிமை
இவற்றுள் நுகர்வோர் பொறுப்புக்களாகக் கருதப்படுபவை எவை?
1. A, C, E 2. A, C, D 3. B, D, E 4. A, B, E 5. B, C, D

07. நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபையின் நோக்கங்களும் பணிகளும் கீழே தரப்பட்டுள்ளன.
A - வியாபாரிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட உடன்பாடுகளை கட்டுப்படுத்தல்.
B - நியாயமற்ற வியாபார நடைமுறைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.
C - போட்டி விலைகளின் போதுமான அளவு பொருட்கள் சேவைகள் போதியளவில் கிடைப்பதை உறுதி செய்தல்.
D - தனியுரிமை தோன்றுவதைத் தடை செய்தல்.
E - உள்நாட்டு சர்வதேச வர்த்தகம் தொடர்பில் பொருளாதார விதிக்கு ஒழுங்கீனமான போட்டி தொடர்பான தடைகளை ஒழித்தல்.
மேற்கூறியவற்றுள் நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிகளை மட்டும் கொண்ட தொகுதியினைத் தெரிக
1. A, C, E 2. B, C, D 3. A, B, C 4. C, D, E 5. A, D, E

The National e-learning Portal for General Education

08. ISO – 14,000 குடும்பதர முறையின் “14011” உள்ளடக்கம்
1. சுற்றாடல் குறிகாட்டல்.
2. சூழல் பெறுபேறுகளின் கட்டுப்பாடும் மதிப்பிடலும்
3. சூழல் தர ஆய்வு முறைமை
4. வாழ்க்கை வட்ட மதிப்பீடு
5. சூழல் முகாமை முறைமை

09. வரையறுத்த பொதுக் கம்பனியொன்றுக்குப் பிரதிகூலமாக அமைவது எது?
1. வரையறுத்த பொறுப்பு
2. சட்ட ஆளுமை
3. தொடர்ந்து இருக்கும் நிலை
4. இழப்புக்கள் வணிகத்தின் அகத்தே வைத்திருக்கப்படுதல்
5. உடைமை கைமாற்றத்தக்கதாக இருத்தல்

10. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் தவறான கூற்றினைத் தெரிக.
1. நியதிச் சட்ட முறைக் கூட்டம் நீக்கப்பட்டுள்ளது.
2. மக்கள் கம்பனி இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.
3. பதிவு ஆவணங்களுக்கு அமைப்பு அகவிதி நீக்கப்பட்டுள்ளது.
4. பங்கு மூலதனம் கூறப்பட்ட மூலதனம் என மாற்றப்பட்டுள்ளது.
5. வருடாந்த பொதுக் கூட்ட அறிக்கை கூட்டம் நடைபெற்று 30 நாட்களுள் பதிவாளருக்குச்சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

11. பின்வரும் அட்டவணையில் X நிரலானது அங்கீகார வணிக வகையினையும் Y நிரலானது அவற்றுக்கான எடுத்துக்காட்டுக்களையும் உள்ளடக்கியுள்ளது.

| | X | | Y |
|---|---|---|---|
| A | உற்பத்தி அங்கீகார வணிகம் | 1 | KIC |
| B | உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகம் | 2 | CEPETCO |
| C | வணிகமுறை அங்கீகார வணிகம் | 3 | P122A HuT |
| | | 4 | CoCa Cola |
| | | 5 | PEPSI |
| | | 6 | IOC |

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிக.

1. A – 1, 4 B – 2, 5 C – 3, 6
2. A – 4, 5 B – 1, 3 C – 2, 6
3. A – 2, 6 B – 4, 5 C – 1, 3
4. A – 1, 3 B – 4, 5 C – 2, 6
5. A – 4, 5 B – 2, 6 C – 1, 3

12. பின்வருவனவற்றுள் "மஞ்செஸ்ரர்" மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்படாதவொரு கூட்டுறவுக் கொளகை எது?
1. திறந்ததும் சுயேட்சையானதுமான அங்கத்துவம்
2. அங்கத்தவர்களின் வாக்களிப்பு வலு கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையில் தங்கியிருக்கும்.
3. அங்கத்தவர்கள் சுதந்திரமாகவும் தனித்தும் கட்டுப்படுத்த முடியும்.
4. சமூகம் தொடர்பான அக்கறை
5. கூட்டுறவுக் கல்வியை வழங்குதல்

13. முயற்சியாண்மையன் திறன் விருத்திகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் எனக் கூற முடியாதது.
1. சந்தர்ப்பம்
2. முகாமைக்குழு
3. வளம்
4. அர்ப்பணிப்பு
5. மேற்கூறிய எவையுமல்ல.

14. வங்கிப் பணத்தின் பண்பு அல்லாதது
1. வணிக வங்கிகளால் உருவாக்கப்படும்
2. சட்டப் பணத்துடன் ஒப்பிடும்பொழுது திரவத்தன்மை குறைந்தது.
3. பரஸ்பர இணக்கத்தின் அடிப்படையிலேயே கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்த முடியும்.
4. சட்ட அங்கீகாரம் உடையது.
5. நடைமுறைக் கணக்கு அவசியம்

15. பதிவு செய்யப்பட்டுள்ள நிதிக் கம்பனிகளின் தொழிற்பாடகக் கருதப்படாதது
1. நிலையான வைப்புக்களை ஏற்றல்
2. கடன்களை வழங்குதல்
3. உண்டியல்களை கழிவீடு செய்தல்
4. முகாமை ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
5. பிணைகள் உத்தரவாதங்களை வழங்குதல்

16. ஒப்படைப்பு பெறுமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்தினைக் கொண்ட காப்புறுதி எது?
1. தீக் காப்புறுதி
2. ஆயுட் காப்புறுதி
3. கடலபாயக் காப்புறுதி
4. மோட்டார் வாகனக் காப்புறுதி
5. தனிநபர் விபத்துக் காப்புறுதி

17. இலங்கை பயணிகள் போக்குவரத்து தொடர்பான விதிகள் ஒழுங்கு என்பவற்றிற்குப் பொறுப்பான நிறுவனம்
1. மத்திய போக்குவரத்துச் சபை
2. மத்திய கேள்வு பணியகம்
3. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
4. இலங்கை மோட்டார் போக்குவரத்துச் சங்கம்
5. மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம்

18. கீழே உமக்குத் தொடர்பாடல் தொடர்பான பரிமாணங்களும் (Dimention) அடிப்படை மூலக்கூறுகளும் தரப்பட்டுள்ளன

A – உள்ளடக்கம் B – செய்தியனுப்புபவர் C – செய்தி

D – வடிவம் E – பின்னூட்டல் F – ஊடகம்

மேற்கூறியவற்றுள் தொடர்பாடல் அடிப்படைக் கூறுகளைக் கொண்ட தொகுதி

1. A, B, E, F 2. B, C, D, E 3. C, D, E, F 4. B, C, E, F 5. A, B, D, F

19. சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு தடையாகவுள்ள காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன

A - இறக்குமதி அனுமதிப் பங்கு முறை B – கலாசார வேறுபாடுகள்

C - சுங்கத்தீர்வைகளை விதித்தல் D – மொழி ரீதியிலான தடைகள்

E - இருதரப்பு வியாபார ஒப்பந்தம் F - பொருளாதாரத் தடைகள்

மேற்கூறியவற்றுள் இயற்கையல்லாத் தடைகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி

1. A, B, C, E 2. A, B, D, F 3. A, C, D, F 4. B, D, E, F 5. A, C, E, F

20. ஒழுங்குபடுத்தல் செய்முறையின் ஒரு தொழிற்பாடு

1. ஊழியரிடல் 2. ஊக்குவிப்பு
3. தொடர்புபடுத்தல் 4. மதிப்பீடு
5. திணைக்களப்படுத்தல்

21. மூலப்பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் பூச்சியமாகப் பேணி களஞ்சியக் கிரயத்தினை இழிவுபடுத்திக் கொள்வதற்காகப் பின்பற்றப்படுகின்ற முறையொன்றாகக் காணப்படுவது எது?

1. JIT
2. ABC பகுப்பாய்வு
3. கணினிச் செயற்றிட்டம்
4. இரட்டைக் கொள்கலன் முறை
5. தொடர் இருப்பெடுத்தலைப் பதிவு செய்யும் முறை

22. மறுகட்டளை மட்டம் பின்வருவனவற்றுள் எதற்குச் சமனாக அமையும்

1. பாதுகாப்பு இருப்பு + சரக்கிருப்பு
2. முதன்மைக் காலக் கேள்வி + சிக்கனக் கட்டளைக் கணியம்
3. முதன்மைக் காலக் கேள்வி + சராசரி இருப்பு
4. பாதுகாப்பு இருப்பு + முதன்மைக்காலக் கேள்வி
5. சிக்கனக் கட்டளைக் கணியம் + இழிந்தளவு இருப்பு

23. சந்தைப்படுத்தல் கலவையில் உள்ளடங்கும் சில கருவிகள் கீழே உமக்குத் தரப்பட்டுள்ளன.

A – தரம் B – விளம்பரம்

C – பொதி D – நேர்சந்தைப்படுத்தல்

E – கழிவு F – பட்டியல் விலை

G - இருப்புக்கள் H – கடன் நிபந்தனைகள்

மேற்குறிப்பிட்டவற்றுள் விலைக் கலவையினுள் உள்ளடங்கும் கருவிகளின் தொகுதியினைத் தெரிக.

1. EFH 2. AEH 3. CDF 4. BEF 5. DFH

24. உற்பத்திப் பொருளொன்றுக்கான விலையிடலின்போது கருத்திற்கொள்ள வேண்டிய பிரதான காரணிகளுள் ஒன்று

1. விநியோகக் கிரயம் 2. மேம்படுத்தல் கிரயம்
3. விநியோக வழிமுறை 4. உற்பத்திப் பொருளின் தரம்
5. போட்டியாளர்களின் விலை

25. பின்வருவனவற்றுள் சந்தைப்படுத்தல் தத்துவத்தையும் அதற்கும் பொருந்தக்கூடிய பிரதான வெளிப்படுத்தலையும் குறிப்பிடுக.

| சந்தைப்படுத்தல் தத்துவம் | பிரதான வெளிப்படுத்தல் |
| --- | --- |
| A - உற்பத்தி எண்ணக்கரு | 1. இறுக்கமான சந்தைப்படுத்தலை மேம்படுத்தல் |
| B - உற்பத்திப்பொருள் எண்ணக்கரு | 2. பாவனையாளர்களது தேவைகளும் விருப்பங்களும் |
| C - விற்பனை எண்ணக்கரு | 3. தரமானது நியாயமானதுமான விலை |
| D - சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | 4. கிடைக்கக்கூடிய தன்மையும் நியாயமான விலை |
| E - முழுமைப்படைப்பு | 5. பாவனையாளர், சமூகம், ஊழியர் |

1. A – 1, B - 2, C - 3, D – 4, E - 5
2. B – 3, C - 4, A - 1, D – 2, E - 5
3. A – 4, B - 3, C - 1, D – 5, E - 5
4. D – 1, C - 2, B - 3, A – 5, E - 4
5. C – 2, D - 3, E - 4, A – 1, B - 5

26. பின்வருவனவற்றுள் எது மனிதவள முகாமையின் ஒரு தொழிற்பாடு அன்று?
    1. மனித வளத்திட்டம்
    2. ஆட்சேர்ப்பு தெரிவும்
    3. உறுதியான ஊழியர் தொடர்புகளைப் பேணுதல்
    4. பொருத்தமான வேலையாளர் படையைப் பேணுதல்
    5. வேதனத்திற்கு அமர்த்தலும் திசைமுகப்படுத்தலும்

27. தகைமை வாய்ந்த பொருத்தமான நபர்களை அகத்தேயிருந்து ஆட்சேர்ப்புச் செய்யும் ஒரு முறையாக அமைவது
    1. மரபுரிமைத் திட்டம்
    2. செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்துதல்
    3. கடந்த கால ஊழியர்களின் பரிந்துரைப்பு
    4. வேலைசார் காட்சி விழாக்கள்
    5. வேலையிலமர்த்தல் இணையத் தளங்கள்

28. பின்வரும் நிதியளிப்பு மூலங்களுள் கம்பனி ஒன்றின் முகாமைத்துவம் கட்டுப்பாட்டிற்கு சவாலாக இருக்கக்கூடியது.
    1. தொகுதிக்கடன் வழங்குதல்
    2. முன்னுரிமைப் பங்கு வழங்குதல்
    3. சாதாரண பங்கு வழங்குதல்
    4. வணிகத்தாள் வழங்குதல்
    5. கடன் காரணிப்படுத்தல்

29. நடைமுறை விகிதம் எடுத்துக்காட்டுவது
    1. திரவத்தன்மை
    2. இலாபத் தன்மை
    3. மூலதன இணைப்பு
    4. நடவடிக்கை
    5. மூலதனச் சந்தையின் தன்மை

30. A – கட்டளை உதவி முறைமை
    B – தீர்மான உதவி முறைமை
    C – முகாமை தகவல் முறைமை
    D – அறிவு செயற்பாட்டு முறைமை
    E – காரியாலயத் தன்னியக்க முறைமை

    மேலேயுள்ளவற்றில் எவை முகாமை மட்டத்தில் பயன்படுத்தப்படும் முறைகள்
    1. AC  2. BC  3. CD  4. EW  5. CE

**31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**

31. மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யும் கருமங்களில் ஒன்றாக ………………………………… அமையும்.

32. சர்வதேச ரீதியில் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருப்பனவாகவும் பரஸ்பரம் இணைந்தனவாகவும் வணிக முயற்சிகள் ஆகும் செயன்முறைக்கு வழங்கும் பெயர் …………………………… ஆகும்.

33. பிரதேச அபிவிருத்தி வங்கியின் மூலம் கிராமிய இளைஞர், யுவதிகள் சுயதொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டம் …………………… ஆகும்.

34. மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கு அறவிடும் வட்டி வீதம் ………………………….. எனவும் வணிக வங்கிகள் தாம் பெறுகின்ற வைப்புக்களில் மத்திய வங்கியிடம் சட்ட ரீதியாக ஒதுக்கி வைக்க வேண்டிய தொகை ……………………… எனவும் அழைக்கப்படும்.

35. முயற்சியாண்மை செய்முறையினைக் காட்டும் வரைபு கீழே தரப்பட்டுள்ளன. இடைவெளியினை நிரப்புக.

புத்தாக்கம் புனைதல் → A. …………….... → B ……………… → வளர்ச்சி

36. குறிப்பிட்ட ஓர் சொத்து ஒன்றுக்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்வதை ………………………… என அழைக்கப்படும்.

37. மாற்றமடைந்துள்ள சூழலுக்கு ஏற்றவாறு அமைப்பினுள் மாற்றங்களை ஏற்படுத்துதல் ………………………… எனப்படும்.

38. சந்தைப்படுத்தல் கலவை வாடிக்கையாளர் பார்வையில்

(i) ………………………………. (ii) ……………………… (iii) ……………………… (iv) …………………………..

39. மூலதனச் சந்தையின் மூலகங்கள்

(i) ………………………………. (ii) ……………………… (iii) ………………………

40. தனிநபர் அல்லது நிறுவனமொன்றின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற வலையமைப்பு ……………………………… ஆகும்.

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

41. இலத்திரனியல் வணிகத் தொழிற்பாட்டினை மேற்கொள்வதற்கு அவசியமான கீழ்க்கட்டமைப்பு வசதிகளில் இரண்டினைப் பெயரிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

42. சிற்றளவு வணிகங்களாக வகைப்படுத்தி அடையாளம் காண்பதற்கான நியதி என்பது தர மற்றும் அளவு ரீதியாக இரண்டு வகைச் சிறப்பியல்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அளவு ரீதியாக சிறப்பியல்புகள்

………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………

43. சில உற்பத்தி பொருட்கள் ஐந்து மட்டங்களில் சந்தைக்கு வழங்கப்படுகின்றது என்பது வெளிப் படையானது அம்மட்டங்களினை ஒழுங்கைத் தருக

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

44. விளம்பரப்படுத்தலின் மூன்று அடிப்படை நோக்கங்களைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

45. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான நிறுவப்பட்ட அமைப்பு எது?

……………………………………………………………………………………………………

The National e-learning Portal for The General Education

46. வெளிநாட்டு வர்த்தகத் தடைகளை தவிர்க்கும் அமைப்புக்கள் எவை?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

47. செயற்திட்டம் ஒன்றின் நிதி, பொருளாதார, தொழில்நுணுக்க சமூக தகவலின் பகுப்பாய்வு ………………………………… , …………………………. என அழைக்கப்படும்.

48. அளவிற்கேற்ப தகவல் முறைமை 4 வகைப்படும்

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

49. X நிறுவனம் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றது. இந் நிறுவனத்தின் நிலையான கிரயாம் ரூபா 300,000 அலகிற்கான விற்பனை விலை ரூபா 10 அலகிற்கான மாறு கிரயம் ரூபா 4/=

1. சமப்பாட்டுப் புள்ளியின் விற்பனை தொகை யாது?

………………………………………………………

2. இந்நிறுவனம் 6000 அலகுகளை உற்பத்தி செய்து விற்கும்போது கிடைக்கக்கூடிய சராசரி மொத்த கிரயம் சராசரி நிலை கிரயம் என்பவற்றை மதிப்பிடுக.

………………………………………………………

………………………………………………………

50. நிறுவனமொன்று நவீன் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நான்கு தருக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

The National e-learning Portal - The General Education

| **வணிகக் கல்வி** | | **வினாத்தாள் I** | | **விடைகள்** | |
|---|---|---|---|---|---|
| 1 | 4 | 11 | 5 | 21 | 1 |
| 2 | 2 | 12 | 2 | 22 | 4 |
| 3 | 3 | 13 | 4 | 23 | 1 |
| 4 | 2 | 14 | 4 | 24 | 5 |
| 5 | 2 | 15 | 5 | 25 | 3 |
| 6 | 2 | 16 | | 26 | 3 |
| 7 | 5 | 17 | 3 | 27 | 1 |
| 8 | 3 | 18 | 4 | 28 | 3 |
| 9 | 4 | 19 | 5 | 29 | 1 |
| 10 | 3 | 20 | 3 | 30 | 1 |

31. உற்பத்தி
32. உலக மயமாக்கல்
33. கமிர கடன் திட்டம் (Kamira)
34. வங்கி வீதம், காசு ஒதுக்கு வீதம்
35. A – பின்னணி B – செயற்படுத்தல்
36. இரட்டைக் காப்புறுதி
37. தீர்மான வகிபாகம்
38. 1. consumer needs 2. Communication
    3. cost 4. convenient
39. 1. திறைசேரி முறிகள் 2. கூட்டிணைக்கப்பட்ட முறிகள்
    3. பங்குச்சந்தை
40. அக இணையம்
41. 1. இணைய வசதி 2. தொலைபேசி வசதி
42. மூலதன அளவு, நிலையான சொத்து அளவு, விற்பனை அளவு, ஊழியர் எண்ணிக்கை
43. மைய உற்பத்தி, அடிப்படை பொருள் உற்பத்தி, எதிர்பார்க்கப்பட்ட பொருள் உற்பத்தி, விருப்பப் பொருள் உற்பத்தி, எதிர்கால உற்பத்திப் பொருள்
44. 1. தகவல் வழங்கல் 2. ஊக்கப்படுத்தல்
    3. ஞாபகப்படுத்தல்
45. இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
46. 1. உலக வியாபார அமைப்பு (WTO)
    2. உலக வங்கி (world bank)
    3. சர்வதேச நாணய நிதியம் (IMF)
47. சாத்திய ஆய்வு
48. 1. தந்திரோபாய மட்டம் 2. முகாமைத்துவ மட்டம்
    3. அறிவு மட்டம் 4. செயற்படுத்தல் மட்டம்
49. 1. ச.பு. விற்பனை தொகை = மொத்தக் கிரயம் / அலகிற்கான பங்களிப்பு
    = 300,000 / 6
    = 50,000 அலகுகள்
50. 1. பாரிய முதலீடு தொடர்பான பிரச்சினை
    2. ஊழியர்களை பயிற்சியளிக்க அதிகளவு பணம் தேவைப்படல்
    3. தொழில்நுட்பம் விரைவில் மாற்றமடைதல்
    4. ஊழியர் உறவு பலவீனமடைதல்